
உ

துர்க்காதேவி துணை



# சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர் 2014

## ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்களின்

## 89ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில்

## கௌரவம் பெறும் பெருமக்கள்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள்
அறநிதியச் சபை,

07-01-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிவநெறிப்புரவலர்"
## வைத்திய கலாநிதி கந்தையா மாணிக்கம் அவர்கள்
### ஓய்வுநிலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



தென்மராட்சி உசனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டுள்ள வைத்திய கலாநிதி மாணிக்கம் அவர்கள் 1925.02.08ம் திகதியன்று உசனைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கந்தையா இருபாலையைச் சேர்ந்த கந்தையா பூபதி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை உசன் இராமநாதன் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றார். தனது கல்வித் திறமையால் கொழும்பு இலங்கை பல்கலைக் கழகத்தில் மருத்துவக்கல்வி கற்று M.B.B.S என்ற பட்டத்துடன் வைத்திய கலாநிதியாக வெளியேறினார்.

அரசாங்க சேவையில் இணைந்து கொண்ட இவர் தனது முதல் நியமனத்தில் காங்கேசன்துறை சிவில் வைத்தியசாலையில் பணியாற்றினார். களுத்துறை சுகாதார நிலையத்தில் பொது சுகாதார சேவை முன் பயிற்சியை ஆறு மாதம் மேற்கொண்ட பின்னர் வவுனியா, குருநாகல், கம்பளை மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்களில் சுகாதார அதிகாரியாக பணியாற்றினார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பொது சுகாதார சேவை முன் பயிற்சி 6 மாதம் பெற்று வவுனியா போதனாவைத்தியசாலையில் சுகாதாரவைத்திய அதிகாரியாகவும் பின்னர் அனுராதபுரம் போதனாவைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றினார். வைத்திய அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்று அனுராதபுரம் போதனா வைத்தியசாலையிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றினார். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று யாழ்ப்பாணம், புத்தளம், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அரசாங்க சேவையில் நிறைவான சேவையாற்றி 1992ல் ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னர் சமூக சமய சேவைகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். உசன் இராமநாதன் மகாவித்தியாலய அபிவிருத்திச் சபை நலன் விரும்பியாகவும், உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் பிரதம நிர்வாகியாகவும் விடத்தற்பளை புதுக்குளத்து அம்மன் கோவில் நிர்வாகியாகவும் உசன் கந்தசுவாமி கோவில் நிர்வாக உதவியாளராகவும் பணியாற்றி வருகிறார்.

மேலும் சமூக சேவை அமைப்புக்களின் பிரதம இணைப்பாளராகவும் கனடாவில் வாழும் உசன் மக்கள் ஒன்றியத்தின் தொடர்பாளராகவும் விளங்கி வருகின்றார். கஜகேணிபிள்ளையார் கோவில் வரலாற்றை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். தமது துணைவியார் அமரர் மாணிக்கம் பூபதி அவர்களின் ஞாபகார்த்த நிதியமாக ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை பாடசாலை மாணவர்களது சைவப் பண்பாட்டு வளர்ச்சிக்காக நிரந்தர வைப்புச் செய்துள்ளார். எமது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் இடம்பெயர்ந்து உசன் கந்தசுவாமி கோவில் பிரதம சிவாச்சாரியாரும் எமது தேவஸ்தான பிரதம சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக் குருக்களுடைய இல்லத்திலும், உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவினுடைய இல்லத்திலும் தங்கியிருந்தபோது வைத்திய கலாநிதி மாணிக்கம் ஐயா அவர்கள் வழங்கிய ஆதரவை நாம் நன்றியுடன் நினைவு கூரவேண்டியவர்கள்.

ஐயா அவர்களது சமய சமூக பணிகளைப் பாராட்டி உசன் கிராம மக்களும் உசன் கனடாஒன்றியமும் இணைந்து 2011.09.10 இல் "சிவநெறிப் புரவலர்" என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள். அரசாங்க சேவையில் நிறைவான சேவையாற்றிய பின்னரும் தனது ஓய்வுக் காலத்தில் அளப்பரிய சமய சமூகப் பணியில் தன்னை ஈடுபடுத்தி அமைதியான ஆன்மீக வாழ்வை மேற்கொண்டு வரும் வைத்திய கலாநிதி மாணிக்கம் ஐயா அவர்களுக்கு இவ் ஆண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்நாள் சாதனையாளர்
## திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள்

பிரபல ஊடகவியலாளர்



யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள் திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்றார்.

"கலைச் செல்வி" என்னும் மாத இதழில் கவிதை எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் "யாழ்நங்கை" என்ற புனைபெயரில் சிறுகதை எழுத்தாளராகவும் விளங்கினர். 1962ம் ஆண்டு யூன் மாதம் வீரகேசரி உதவி ஆசிரியராக இணைந்த இவர் தமது செய்திக் கடமையோடு "மாணவர் கேசரி" என்னும் பக்கத்தையும் கவனித்து வந்தார். 1966ம் ஆண்டு வீரகேசரி நிறுவனம் வெளியிட்ட "ஜோதி" என்னும் குடும்ப வார இதழில் பொறுப்பாசிரியராக கடமையாற்றினார். 1969ம் ஆண்டு முதல் வீரகேசரி நாளிதழில் கட்டுரைப் பகுதியில் பொறுப்பாக இருந்து கடமையாற்றி பல்வேறு கட்டுரைகளையும் தயாரித்து வெளியிட்டார்.

1973ம் ஆண்டில் இருந்து 1984ம் ஆண்டு வரை மித்திரன் வாரமலர் பத்திரிகையின் பொறுப்பாசிரியராக கடமையாற்றினார். இக்காலப் பகுதியில் கட்டுரைகள், சிறுகதைகள், குறுநாவல்கள், நேர்முகங்கள், சிறுவர் தொடர்கதைகள், விமர்சனங்கள், மொழி பெயர்ப்புக் கதைகள் போன்றவற்றை மித்திரன் வாரமலர், வீரகேசரி ஞாயிறு இதழ் ஆகியவற்றில் எழுதிவந்தார். அத்துடன் புதிய எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு இடமளித்து அவர்களுக்கு ஊக்கமளித்தார்.

1984ம் ஆண்டு முதல் 1999ம் வரை வீரகேசரி நாளிதழுடன் இணைந்து செய்திப் பகுதியில் கடமையாற்றியதுடன் மகளிர் பகுதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பகுதி போன்ற விசேட பக்கங்களையும் நாளிதழின் சிறப்பு மலர்களுக்கும் பொறுப்பாக இருந்து சிறப்பாகக் கடமையாற்றினார்.

2000ம் ஆண்டிலிருந்து மங்கையர்கேசரி, கலைக்கேசரி ஆகிய வார இதழ் அனுபந்தங்களின் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டார். அதன் பின்னர் வீரகேசரியின் "சங்கமம்" இதழ் வார அனுபந்தத்தின் பொறுப்பாசிரியராக இருந்து வருகின்றார். 2010ம் ஆண்டிலிருந்து கலைக்கேசரி மாத சஞ்சிகையின் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார்.

திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையிலும், மகளிர் நிகழ்ச்சி, கலைக் கோலம் உரை நிகழ்ச்சி போன்றவற்றில் எழுதிப் பங்கு கொண்டிருக்கின்றார். 1967–1968ம் ஆண்டுகளில் "பூஞ்சோலை" என்னும் கிராம மகளிர் நிகழ்ச்சியையும், பின் 1977–1978ம் ஆண்டுகளில் "மகளிர் அரங்கம்" என்னும் கிராம மகளிர் நிகழ்ச்சியையும் தயாரித்து வழங்கியுள்ளார். பல வானொலி நாடகங்களையும் எழுதி அவற்றை ஒலிபரப்பாக்கி உள்ளார்.

சமீபத்தில் தமது பத்திரிகைத்துறையின் 50 ஆண்டுகால அனுபவங்களின் ஒரு தொகுப்பாக "நினைவுப் பெருவெளி" என்னும் நூலை எழுதி வீரகேசரி வெளியீடாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

நெருப்பு வெளிச்சம் (சிறுகதைத் தொகுதி), உள்ளத்தின் கதவுகள் (நாவல்), விழிச் சுடர்(குறுநாவல்), இருபக்கங்கள் ( கவிதைத் தொகுதி ) என்பன இவரது படைப்புகளாகும். மணிலா, பீஜிங் நகரங்களில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்ட அனுபவங்களை வீரகேசரி வார வெளியீட்டில் தொடராக பல வாரங்கள் எழுதினார். 2010ஆண்டு தமிழ்நாடு கோயம்புத்தூரில் நடைபெற்ற உலக செம்மொழி மாநாட்டில் இவர் பார்வையாளராக கலந்து கொண்டு வீரகேசரியில் தொடர் கட்டுரைகள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பணிகளைப் பாராட்டி இந்துகலாச்சார அமைச்சு 1992ம் ஆண்டு "தமிழ் மணி" விருது வழங்கி கௌரவிதத்து. சிறந்த பத்திரிகையாளருக்கான விருதை 1993ம் ஆண்டு எஸ்மனட் விக்கிரமசிங்க அறக்கட்டளை அன்றைய ஜனாதிபதி டி.பி விஜயதுங்க மூலம் இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

2003ம் ஆண்டு இலங்கை பத்திரிகையாளர் சங்கம் சிறந்த பத்திரிகையாளருக்கான விருதையும், தங்கப்பதக்கத்தையும் வழங்கி கௌரவித்தது. 2009ம் ஆண்டு ஜனாதிபதி மகிந்தராஜபக்சாவின் மூன்றாவது வருட பதவி நிறைவை முன்னிட்டு இலங்கைப் பெண் பத்திரிகையாளருக்கு வழங்கப்பட்ட விசேட விருது வழங்கல் நிகழ்வில் தமிழ்ப் பத்திரிகையாளருக்கான விருது இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. எழுத்தாளர் ஊக்குவிப்புமையம் 2011ம் ஆண்டுக்கான "தமிழியல் விருது" இவருக்கு வழங்கி கௌரவித்தது. "கொடகே" வாழ்நாள் சாதனையாளர் விருது(2012) இவருக்கு கடந்த செப்ரெம்பர் 2013ல் வழங்கப்பட்டது. பத்திரிகைத்துறையில் 50 வருட பூர்த்தியை முன்னிட்டு எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் ஸ்தாபனம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

கவிஞராக இலக்கிய உலகில் பிரவேசித்து பத்திரிகையாளராக, எழுத்தாளராக, இதழாசிரியராக, நாடகாசிரியராக 50 ஆண்டுகள் பன்முகப் பணியாற்றி வரும் வாழ்நாள் சாதனையாளர் திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை அவர்களுக்கு இவ்வாண்டுக்கான "சிவத்தமிழ் விருது" வழங்கி கௌரவிப்பதில் பெருமையும் மகிழ்வும் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம்
## சங்கீதபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை அவர்கள்
**ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்**



இசைக்கலைஞர் கணபதிப்பிள்ளை அவர்கள் சுப்பையா வள்ளியம்மை தம்பதியினருக்கு 1939-10-16இல் நெல்லியான் சுழிபுரத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாலயத்திலும், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்திலும் இடை நிலைக் கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

பாடசாலைக் கல்வியின் போது இசை, நாடகம், பேச்சு என்பனவற்றில் தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார். இசையின் மீது இருந்த ஆர்வத்தால் அத்துறையில் தேர்ச்சி பெற விரும்பி ஆரம்ப காலத்தில் தவில் வித்துவான் வலங்கைமான் ஆறுமுகம்பிள்ளை, பெரியதந்தையார் வரகவி பொன்னாலை பே.க.கிருஷ்ணபிள்ளை, சங்கீத பூஷணம், செ. இரத்தினசபாபதி சங்கீத ஆசிரியர் ஆகியோரிடம் இசைப் பயிற்சி பெற்றார்.

அத்துறையில் மேலும் முன்னேற விரும்பி தென் இந்தியா சென்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த இசைப் பேரறிஞர் எம்.எம்.தண்டபாணிதேசிகர் T.K.ரங்காச்சாரி M.P.வச்ரவேல் முதலியார் T.N.சிவசுப்பிரமணியபிள்ளை மன்னார்குடி இராஜகோபால பிள்ளை ஆகியோரிடம் இசைப்பயிற்சி பெற்று அப் பல்கலைக்கழகத்தின் சங்கீத பூஷணம் பரீட்சையில் 1ம் வகுப்பில் சித்தியடைந்து சங்கீதபூஷணம் பட்டத்தைப் பெற்றார். பலாலி ஆசிரியர் கலாசாலை பயிற்றப்பட்ட இசை ஆசிரியராகவும் இருந்த இவர் தனது ஆசிரிய பணியை இசை ஆசிரியராக மேற்கொண்டார். யா/ அனலைதீவு மகாவித்தியாலத்தில் 7.9.1966 இல் முதல் நியமனம் பெற்ற இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/காரைநகர் இந்துக்கல்லூரி, யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, குரு/குருநாகல் இந்து மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இசை ஆசிரியராக கடமையாற்றினார். பின்னர் பதவி உயர்வு பெற்று கல்வி அதிகாரியாகவும், பிரதி கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 1999.10.16 இல் ஓய்வு பெற்றார்.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சகராகவும் வட இலங்கை சங்கீத சபையின் உப தலைவராகவும் விளங்கினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பனவற்றின் விசேட பிரிவு இசைக் கலைஞராக இசையரங்குகள் செய்து சிறப்பித்தார். மேலும் மிருதங்க அரங்கேற்றம், நாட்டிய நிகழ்வுகள் என்பவற்றிற்கு குரலிசை வழங்கி அந்நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தார். சேவைக் காலத்தின் போதும் பின்னரும் ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை, திருமுறை ஓதல், புராணபடனத்திற்கு பாடல்களைப் பண்ணோடு பாடுதல், ஊஞ்சற்பாடல் பாடுதல், சிவதொண்டன் நிலையம், நல்லை ஆதீனம், சிவபூமி ஆகியவற்றின் ஆன்மீகச் செயற்பாடான குரு பூசைகளில் பங்கு பற்றுதல் போன்ற செயற்பாடுகளால் இவரது இசைத் தொண்டு தொடர்கின்றது.

இவர் பெற்ற சிறப்புப் பட்டங்கள் கலாபூஷணம், கலைஞானகேசரி பண்ணிசை செல்வர், கானவாரிதி, ஸ்வரலயகானமணி, இசைக்கலை வேந்தன் சுரபதகேசரி. எமது தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் தேர் உற்சவ நாளன்று திருமுறை மடத்தில் நிகழும் தெய்வீக இசை அரங்கில் தவறாது பங்கு பற்றி சிறப்பித்து வருகின்றார். மூத்த இசைக்கலைஞராக இசைப்பணி ஆற்றிவரும் கலாபூஷணம் கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஒளிபரப்புக்கலை விற்பன்னர்"
## திரு. நாகலிங்கம் தவமணிநாயகம் அவர்கள்
### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்.



"உதயதாரகை" கோணப்புலம் வீதி மல்லாகத்தில் 25.06.1928ம் ஆண்டு நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாக திரு. தவமணிநாயகம் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மல்லாகம் கனிட்ட வித்தியாலயத்திலும் (தற்போது கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிட்ட வித்தியாலயம்) உயர் கல்வியை மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றுக் கொண்டார். 1950-1988 வரையான காலப்பகுதியில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றினார். யா/திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் S.S.C. படித்துக் கொண்டிருந்த காலத்தில் அதன் சகோதரக் கல்லூரியான மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற நாடக நிகழ்வின் போது ஒளியமைப்பில் ஏற்பட்ட தடங்கலால் இறுதியில் ஒலிபெருக்கி ஒளியமைப்பு இல்லாமலே விழா நடைபெற்றதைக் கண்ணுற்ற தவமணிநாயத்திற்கு ஒளியமைப்பு ஒலியமைப்பு இரண்டையும் முறையாக செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இவ்வாறு இவருக்கு இத்துறையில் ஆர்வம் ஏற்பட்டாலும் அதை நடைமுறைப் படுத்துவதற்கு போதிய ஒளி ஒலி சாதனங்கள் கிடைக்கவில்லை. அப்போது யாழ்ப்பாணத்தில் சிறந்த தொழில் நுட்பக்கலைஞராக இருந்த சீனன் நடராஜா என்பவரை அணுகி அவர் மூலமாக வெள்ளைக்கார நண்பர் ஒருவர் மூலமாக இங்கிலாந்திலிருந்து 50 வாற்ஸ் அம்பிளிபயர் ஒன்றைப் பெற்று 1951ம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கு ஒன்பது ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தினார். இதில் தென் இந்தியப் பாடகி எம்.எல்.வசந்தகுமாரியின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. இவ் ஏற்பாடு தவமணிநாயகம் அவர்களுக்குப் பெரும் புகழை ஏற்படுத்தித் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியமைப்பில் 1952ம் ஆண்டுவரை கலர் காட்டுவதற்கு பக்கத்திலிருந்து ஒருவர் ஒவ்வொரு கலர்வர கையால் சுத்திக்காட்டும் முறையை மாற்றி ஆளில்லாமல் Slow Speed Motor போட்டு தானாகவே இயங்க வைத்தார். அதன் பின்னர் வெளிநாட்டில் பெரிய Stage Lighting companyயுடன் தொடர்பு கொண்டு Baby Spot Fresnel Spot Follow spot என்று பல spot light களையும் EFECT LIGHT களான MOVING ROAD, FIRE FLAME THUNDER LIGHTING, Sea waving DISOLVING Colours போன்றவற்றையும் எடுத்து ஒளியமைப்பை திறமையாக செய்தார். இவர் ஒளியமைப்புத்துறையை ஒரு பாடமாக கற்கவில்லை. இவர் வாழ்ந்த காலத்தில் தற்காலத்தில் இருப்பது போன்று நவீன தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கவில்லை. ஒளியமைப்புத் துறையில் இவருக்கு குரு என்று யாருமே இருக்கவில்லை. இவரது சுய முயற்சியே காரணம். ஒரு வகையில் சீனன் நடராஜாவை குரு எனக் கூறலாம் எனக் குறிப்பிடுகின்றார். BALL Mirror என்றொரு கருவி மூலம் மேடையில் காதற் காட்சிகளைக் கொண்டு வந்தார். இதன் மீது ஒளியை தெறிப்படையச் செய்து மேடையெங்கும் நட்சத்திரங்கள் தெறிப்பது போல் செய்து இக்காட்சியைக் கொண்டு வந்தார். முகில் Light மூலம் பின்னணியில் மேகக்கூட்டம் செல்வது போன்ற அசைகின்ற காட்சிகளையும் காட்டினார். இவ்வாறாக ஒளிபரப்புத் துறையில் இவரது செயற்பாடுகளை விரிக்கின் அது ஒரு நூலாக அமையும். இதனை ஓரளவிற்கு பூர்த்தியாக்கியிருக்கிறார் செல்வி அபர்ணா இராமதாஸ் அவர்கள் தனது நுண்கலை மாணி சிறப்புப் பட்டத்தேர்வின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் ஒரு பகுதியைப் பூர்த்தியாக்கும் பொருட்டு "யாழ்ப்பாண அரங்க வரலாற்றின் ஒளியமைப்புக் கலையில் தவமணி நாயகம் அவர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக் கட்டுரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் நடன நாடகத் துறைக்கு 2011 இல் சமர்ப்பித்தார். இக் கட்டுரை ஒளிபரப்புத் துறையில் இலைமறை காயாக இருந்த தவமணிநாயகம் அவர்களை வெளி உலகிற்கு கொண்டு வர பெரியளவில் பங்களித்திருக்கின்றது. இதற்காக நாம் ஆய்வுக் கட்டுரையாளரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடன் பாராட்டுகின்றோம். தவமணிநாயகம் அவர்கள் எங்கள் ஆலய நிர்வாக சபையின் ஒரு மூத்த உறுப்பினர் ஆவார். ஆலயத்திலும், நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்திலும், மின், நீர் விநியோகங்களுக்கு பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றார். தற்போது அவரது புதல்வன் தயானந்தனை இப் பணியில் ஈடுபட வைத்து தனது பணி தொடர வைத்துள்ளார். திரு.தவமணிநாயகம் அவர்கள் ஒளிபரப்புக் கலைக்கு ஆற்றிய பங்களிப்பையும் எமது ஆலயத்திற்கு ஆற்றி வரும் கௌரவ சேவையையும் மதித்து அவருக்கு இவ் ஆண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் பெரிதும் மகிழ்வடைகின்றோம்.

**கலைஞர் ஒளியமைத்த நாடக அரங்குகள் :**

| | |
|---|---|
| 01. மனிதனும் மிருகமும் | 02. தாளக் காவடி |
| 03. உயிர்த்த யேசு | 04. நானே கடவுள் |
| 05. பலி நட்சத்திர வாலி | 06. புகுந்த வீடு |
| 07. ஓதெல்லோ | 08. சுக்கிலாச்சாரியார் |
| 09. பூதத்தம்பி | 10. மின்னல் |
| 11. கண்ணாடி வார்ப்புக்கள் | 12. அதிமானுடன் |
| 13. கோடை | 14. புதிய தொரு வீடு |
| 15. ஒரு பாவை வீடு | 16. விளக்கும் விரலும் |
| 17. பொறுத்தது போதும் | 18. யுக தர்மம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. காத்தவராயன்

20. முகமில்லா மனிதர்கள்

21. சுங்காரம்

22. சிலுவைப் பாதம்

23. அரிச்சந்திரா

24. கூடி விளையாடு பாப்பா

25. பலி துடைத்த பலி

26. காலத்தை வென்றவன்

27. அபசுரம்

28. ஏகலைவன்

29. நொண்டி

30. வாலி வதை

31. கர்ணன் போர்

32. வேதாளம் சொன்ன கதை

33. கரிதாஸ் சுவாமிகளின் ஞானேஸ்வரன் சுந்தர முர்த்தி நாயனார்

34. சுருதிபேதம்

**இலங்கை இந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளில் முக்கிய பங்களிப்பு**

- சீதாஞ்சலி நல்லையா– நடன நிகழ்ச்சி
- ஏரம்பு சுப்பையா கலாபவனம் – நிகழ்ச்சிகள்
- வேல் ஆனந்தன் அவர்களின் நிகழ்ச்சிகள்
- நாட்டிய வித்தகி சுவர்ணமுகி அவர்களின் நடன நிகழ்ச்சிக்கு அரங்க ஒளி அமைப்பு
- நடன மேதை ஜெயமாலா அவர்களின் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6/1/2018

## மட்டுவில்
## ஆசிரிய தீபம் நா.நல்லதம்பி அவர்கள்
**(ஓய்வு பெற்ற அதிபர்)**



தென்மராட்சியில் மட்டுவில் பதி உலகறிந்த சைவத்தமிழ் அறிஞர்களை பெற்றெடுத்த ஊர். திருவாதவூரடிகள் புராணத்திற்கு சிறந்த உரை எழுதிய ம.க வேற்பிள்ளை புலவர், உலகத் தமிழ் அறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை போன்றோர் முன் உதாரணமானவர்கள்.

இத்தகைய பெருமை மிகுந்த மட்டுவில் பதியில் திரு.திருமதி நாகமுத்து சிதம்பரம் தம்பதிகளுக்கு சிரேட்ட புத்திரனாக நல்லதம்பி அவர்கள் 26.05.1928ம் ஆண்டு பிறந்தார். இவர் தமது ஆரம்ப கல்வியை மட்டுவில் சந்திர மௌலீசர் வித்தியாசாலையிலும் கமலாசினி வித்தியாசாலையிலும் கற்று உயர் கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் சிறப்பாக கற்றார். அக்காலத்து S.S.C எனும் பரீட்சையை 1945ல் எழுதி தேர்வு பெற்றார். இதே பரீட்சையை 1949ம் ஆண்டு ஆங்கில மொழியில் பரீட்சையை எழுதி விஷேட சித்தி பெற்றார்.

1950ம் ஆண்டு தமிழ் ஆசிரியர் தராதர பத்திரத்திற்காக பயிற்சி பெற்று ஆசிரிய தராதர பத்திர சான்றிதழ் பெற்றார். பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையில் 1951ம் ஆண்டு தொடக்கம் 1952வரை பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரபத்திர சான்றிதழைப் பெற்றுள்ளார். ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் க/நாவலப்பிட்டி சென் மேரிஸ் தமிழ்க்கலவன் பாடசாலை, பதுளை/பசறை சிங்கள, தமிழ் கலவன் பாடசாலை, பண்டாரவளை மத்திய மகாவித்தியாலயம், பண்டாரவளை சென் மேரிஸ் தமிழ்க்கலவன் பாடசாலை, அப்புத்தளை தமிழ்க் கலவன் பாடசாலை சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வியை சிறப்பாகக் கற்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் தரம் 2ல் வ/வேலன்குளம் தமிழ் கலவன் பாடசாலை, யா/ கைதடி C.C.No 01 தமிழ் கலவன் பாடசாலை, யாழ் சாவகச்சேரி கெருடாவில் தமிழ் கலவன் பாடசாலை அதிபராக அரும் பணி புரிந்தார். அதிபர் தரம் 01ல் யா/வடக்கு சரசாலை தமிழ் கலவன் பாடசாலை பின்னர் யா/ நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராக பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

தமிழ் இலக்கிய அறிஞராக "குடத்துள் விளக்குப் போல" அமைதியாக வாழ்ந்து வரும் நல்லதம்பி ஐயா பல நூல்களையும் கவிதைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் "இலக்கிய அமுதம்" 2001லும் "திருக்குறள் நெறியில் இலக்கிய சிந்தனைகள்" 2012லும் வெளியிட்டமை நல்லதம்பி ஐயாவிற்கு பெருஞ் சிறப்பையும் பெரும் புகழையும் கொடுத்தது எனலாம். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் திருப்பதிகம், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோயில் பாரதியார் பாடல் தொகுப்பு, மட்டுவில் மருதடிப்பிள்ளையார் கவசம் தொகுப்பு போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

செல்வச் சந்நிதியான் ஞானசுடர் சஞ்சிகைக்கு கட்டுரைகள் எழுதி இரண்டு தடவை கௌரவம் பெற்றுள்ளார். மேலும் "அருள் ஒளி" போன்ற சஞ்சிகைகள் மலர்கள் என்பவற்றிலும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். உதயன் பத்திரகையில் ஞாயிறு வெளியீட்டில் "மட்டுவில் நா.நல்லதம்பி" என்ற பெயரில் பல கட்டுரைகள் எழுதி பல அறிஞர்களாலும் இலக்கிய ஆர்வலர்களாலும் ஈர்க்கப்பட்டுள்ளார். கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், இலக்கிய கலாநிதி பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை முதுபெரும் அறிஞர் புலவர்மணி திரு.வை.க.சிற்றம்பலம் புலவர் ம.பார்வதிநாதசிவம். போன்றவர்களால் நன்கு மதிக்கப் பெற்றவர். மேலும் இவருடைய உதயன் பத்திரிகையில் வெளி வந்த 50 மேற்பட்ட இலக்கிய கட்டுரைகள் நூல் வடிவம் பெற காத்திருக்கின்றன. மட்டுவில் நா.நல்லதம்பி அவர்கள் சுவிஸ்,பிரான்ஸ், இத்தாலி போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேய நாட்டுக் கோயில்களுக்கும் மட்டுவில், ஏழாலை தனங்கிளப்பு, கல்வயல் தச்சன்தோப்பு போன்ற கோயில்களுக்கும் வரன்முறையாக திருவூஞ்சல் பாடல்கள் பாடியுள்ளார்.

இவர் தென்மராட்சியில் உள்ள சைவ ஆலயங்களில் சமய சொற்பொழிவுகள் ஆற்றுவதும் பொது நிகழ்வுகளிலும் பாடசாலைகள், நூல் வெளியீடுகளிலும் கௌரவ விருந்தினராக பங்கு பற்றி தமது சமய சமுதாய பணிகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். நம்நாட்டு பத்திரிகைகள் சஞ்சிகைள், என்பவற்றிற்கு பல கட்டுரைகளை எழுதி வரும் இவர் மூதறிஞர் தகமையுடன் வாழ்ந்து வருபவர் ஆவர். இத்தகைய பெருமைக்குரிய மூதறிஞர் மட்டுவில் நா.நல்லதம்பி அவர்களுக்கு கலாநிதி சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் 89 வது பிறந்த நாள் அறக்கொடை விழாவில் "சிவத்தமிழ் விருது" வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையுடன் மகிழ்வடைகிறோம்.

2017. Acc. 2816X MOTOR X



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்வி அறக்கொடை வழங்கல் – 2014



- **யாழ். போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு பிரிவு**
  **பெறுபவர் : வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா அவர்கள்**
  ( யாழ். போதனா வைத்தியசாலை )
- **தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை**
  **சிறுவர் விடுதி பராமரிப்பு**
  **பெறுபவர் : வைத்திய கலாநிதி மு. உமாசங்கர் அவர்கள்**
  ( வைத்திய அத்தியட்சகர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை )
- **சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்**
  யாழ் கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் கற்கும் திறமையின் உச்சமும் வறுமை நிலையின் உச்சமும் கருத்திற்கொண்டு, நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல்.
  **பெறுபவர் : திரு.செல்லத்துரை உதயகுமார் அவர்கள்**
  ( கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம் )

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
*தலைவர்*

**திரு.நா.தவநாதன்**
**திரு.மு.அருளையா**
*( இணைச் செயலாளர் கள்)*

**திரு.அ. சண்முகநாதன்**
*பொருளாளர்*
**திரு.சு. ஏழூர்நாயகம்**
*உப பொருளாளர்*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை,**
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*
*07-01-2014*

ANDRA DIGITAL PRINTERS T.P: 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org